[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

வாய்ப்பு ஏற்படும் என்று கருதி, இந்த நிதி ஒதுக்க மசோதாவை நாளை எடுத்துக் கொள்ளலாம் என்ற தன்மையிலிருந்து இன்றே அதையும் நிறைவேற்ற வேண்டிய தன்மைகள் இருக்கின்றன. ஆகவே, நாளைய தினம் சட்டமன்றம் இருந்தால்தான் நிதி ஒதுக்க மசோதாவை நிறைவேற்ற முடியும். ஆகவே, இந்த விதியைத் தளர்த்தி, இன்றே அந்த நிதி ஒதுக்க மசோதாவை எடுத்துக் கொள்ளலாம் என்ற தீர்மானத்தை நான் முன்மொழி கிறேன்.

சட்டமன்றப் பேரவை விதி 30,130 மற்றும் 132 ஆகிய வற்றைத் தளர்த்தி, ''1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண். 2] சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 52/1991) இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்'' என்னும் தீர்மானத்தை நான் முன் மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்.

தீர்மானம் நிறைவேறியது.

இந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் இதர சட்டமுன் வடிவுகளை நிறைவேற்றியதற்குப் பிறகு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு மாலையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறும். இப்போது ஏனைய சட்டமுன்வடிவுகள்.

11. சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(அ) உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரி (திருத்த) சட்டமுன்வடிவு 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; 1991-ம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 41/ 1991) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்,

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 41/1991) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்'' எனக் கோருகிறேன்.

பிற்பகல் 1.05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3. திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன் வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)
மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1991 ஆம் ஆண்டு தமிழ் நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரி (திருத்த) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 41/1991) நிறைவேற்றப்பெற வேண்டும்

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)
மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி).

(ஆ) பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன் வடிவு 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 42/1991) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1991ஆம் ஆண்டு தமிழ் நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 42/1991) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)
மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.